**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண்.330/2021 வா.சா.1 முத்துசாமி

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 11.02.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) இவ்வழக்கில் என் முழு சொத்திற்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோருகிறேனா அல்லது வழி தடத்திற்கு மட்டும் கோருகிறேனா என்றால் முழு சொத்திற்கும் கோருகிறேன். வழக்கு சொத்து வழி தடத்தில் எனக்கு மட்டும் அல்லாமல் பிறருக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. க.ச. எண். 480 மட்டுமே பாத்தியம் உள்ளது. க.ச. எண். 480 ல் யார் யாருக்கு அந்த வழி தடத்தில் பாத்தியம் உள்ளது என்றால் மயில்சாமி, கிருஷ்ணசாமி மகன் முத்துசாமி மற்றும் ராமலிங்கம் ஆகியோருக்கும் பாத்தியம் உண்டு.

2) கடந்த 21-07-1921 ல் வழக்கு சொத்து மற்றும் பிற சொத்துக்கள் வா.சா.ஆ. 1 பாக சாசனம் மூலம் பாகம் ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவண விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ. 1 பாக சாசனத்தின் தரப்பினர் ஐவரின் வாரிசு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஐவரில் ஒருவரான சுப்பே கவுண்டருக்கு முத்து கவுண்டர் மற்றும் பழனிசாமி கவுண்டர் என இரு வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி ஐவரில் ஒருவரான சுப்பே கவுண்டர் எனக்கு என்ன உறவு என்றால் என் தந்தை வழி தாத்தாவின் சகோதரர் . மேற்படி முத்து கவுண்டர் மற்றும் பழனிசாமி கவுண்டர் இருவரின் மகன்கள் பெயரும் அம்மாசி கவுண்டர் என்றால் அது எனக்கு தெரியாது.

3) மேற்படி இரு அம்மாசி கவுண்டர்களுக்கு இடையே வழக்கு வழி தடம் தொடர்பாக பொள்ளாச்சி உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 288/2001 வழக்கு நடந்தது என்றால் சரிதான். அவ்வழக்கில் என்ன உத்தரவு ஆனது என்றால் நான் தரப்பினர் இல்லை என்பதால்

எனக்கு தெரியவில்லை. அவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு வழி தடத்தை பார்வையிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது.

4) வழக்கு சொத்திற்கான பத்திரம் 100 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட வா.சா.ஆ. 1 பாக சாசனம் என்றால் சரிதான். என் வழக்கில் அதற்கு பின்னிட்டு 1970 ல் வாய்மொழி பாகம் ஒன்று ஏற்பட்டதாக கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வாய்மொழி பாகம் யார் யார் இடையே எந்த தேதியில் ஏற்பட்டது என காட்டும் ஒப்பந்தம் இல்லை என்றால் சரிதான். நான் சொல்லும் வாய்மொழி பாகப்படி பிரித்து கொண்ட அவரவர் பாகங்களுக்கு எவ்வாறு வழி தடம் என்பதற்கு பதிவுகள் இல்லை என்றால் சரிதான்.

5) 2002 ல் வா.சா.ஆ. 2 ஆவணப்படி யார் யார் பாகம் செய்து கொண்டோம் என்றால் நான் என் தந்தை மற்றும் எங்கள் குடும்ப நபர்கள் பாகம் செய்து கொண்டோம். 2002 ல் வா. சா.ஆ. 2 பாக சாசனத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை தான் வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரிதான்.

6) வழக்கு சொத்து விவரத்தில் சொல்லியுள்ள தட பாத்தியங்கள் வா.சா.ஆ. 2 ஆவணத்திற்கு முந்தைய எந்த ஆவணப்படி எழுதப்பட்டது என்றால் முன்னர் எந்த ஆவணத்திலும் தட பாத்தியம் எழுதப்படவில்லை. அவ்வாறு எனில் வா.சா.ஆ. 2 ஆவணத்தில் எழுதியுள்ள தட பாத்தியம் என்பது எனது பங்காளிகளுக்கு தெரிவிக்காமல் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி